


**20.11. 2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கயானாவில் கரீபியன் இந்திய உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

2. நாட்டில் பொழுதுபோக்கு துறையின் படைப்பாற்றல் பொருளாதாரம் 30 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று லாவோஸ் புறப்பட்டார்.

4. கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

5. ஆசிய மகளிர் சாம்பியன் பட்ட ஹாக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது 3 நாடுகள் பயணத்தின் 3ஆவது கட்டமாக கயானா ஜார்ஜ் டவுனில் அந்நாட்டு அதிபர் முகமது இர்ஃபான் அலியுடன் இன்றுமாலை இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இதன் ஒருபகுதியாக பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

2ஆவது இந்திய **Caricom** கரீபியன் சமூக உச்சிமாநாட்டில் பிரதமர் இன்று பங்கேற்கிறார்.

இதனை தொடர்ந்து இருதரப்பு நட்புறவை விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கிறார்.

நாளை காயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் பிரதமர் இந்திய வம்சாவளியினரிடையே கலந்துரையாடுகிறார்.

இந்த பயணத்தின்போது கயானா நாட்டின் **"The Order of Excellence"** உயரிய விருது பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு வழங்கப்படுகிறது.

முன்னதாக இன்றுகாலை கயானா சென்றடைந்த பிரதமரை அதிபர் முகமது இர்.்.பான் அலி அமைச்சர்கள், இந்திய வம்சாவளியினர் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றனர்.

இந்த வரவேற்பு குறித்து மகிழ்ச்சி வெளியிட்ட பிரதமர் இருநாடுகளுக்கிடையே நட்புறவு மேலும் வலுப்படும் என்று உறுதிபட தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் இந்திய சமூகத்தினர் கயானாவில் சிறப்பாக செயலாற்றி வருவதாக அவர் பெருமிதம் வெளியிட்டார்.

**********

<u>அஸ்விணி வைஷ்ணவ்</u>

நம் நாட்டின் படைப்பாற்றல் பொருளாதாரம் 30 பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரித்திருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் மற்றும் ஹிந்தி நாளிதழ்களில் வெளியான கட்டுரையில் இதனை எடுத்துரைத்த அமைச்சர் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் இது 2.5 சதவிகிதம் என்றும், 8 சதவிகித தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு இதுவழிகோலுவதாகவும் குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் திறன் தொழில்கள் ஆக்கப்பூர்வமாக செயல்படுவதாகவும், 2 லட்சம் திறனாளர்களுடன் இதன் சந்தை மதிப்பு 3 ஆயிரம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

திறன் சங்கிலி, படைப்பாளர்களுக்கான கட்டமைப்பை வலுப்படுத்துதல், அவர்களுக்கு ஆளுமை வழங்குவது என 3 அம்சங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக குறிப்பிட்டார்.

இதன்மூலம் உலக அளவில் இந்தியாவின் படைப்பாற்றல் திறன் முன்னெடுத்து செல்லப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

படைப்பாற்றல் திறனையும், புதுமையான சிந்தனைகளையும் ஊக்குவிக்கும் மத்திய அரசின் உறுதிபாட்டை எடுத்துரைத்த அமைச்சர், இன்றுதொடங்கும் "சர்வதேச ஒளி, ஒலி பொழுதுபோக்கு உச்சிமாநாடு" நம் நாட்டை உலக அளவில் முன்னிறுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

55ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் அடுத்த 8 நாட்களுக்கு உலக தரத்திலான திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளதை எடுத்துரைத்த அவர், சமூக வலைதளங்கள் மற்றும் **OTT** சேவைகள் படைப்பாற்றல் திறனாளர்களை ஒருங்கிணைப்பதாக குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் திறனாளர்களின் வரலாற்று வெற்றியை சுட்டிக்காட்டிய அமைச்சர், 20 ஆயிரம் ரூபாய் முதல் இரண்டரை லட்சம் ரூபாய்வரை மாதந்தோறும் இவர்கள் வருவாய் ஈட்டுவதாக குறிப்பிட்டார்.

இத்தகைய சூழல், வருவாய் ரீதியாக பயனளிப்பதோடு மட்டுமல்லாமல் கலாச்சார சமூக பரிவர்த்தனைக்கான தளமாக திகழ்கிறது என்றார்.

**********

திரைப்பட விழா

55-வது சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று மாலை கோலாகலமாக தொடங்குகிறது.

வரும் 28ஆம் தேதிவரை நடைபெற உள்ள இவ்விழாவில் 81 நாடுகளை சேர்ந்த 180 சர்வதேச திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

துவக்க விழாவில் ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிரேஸி தயாரித்துள்ள **Betterman** திரைப்படம் திரையிடப்பட உள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் மற்றும் இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் துவக்க விழாவில் பங்கேற்கின்றனர்.

**********

தேர்தல்

மஹாராஷ்டிர மாநிலத்தில் 288 சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தில் 38 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி மஹாராஷ்டிராவில் **32.18** சதவிகிதமும்,

ஜார்கண்டில் 47.92 சதவிகிதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

மஹாராஷ்டிராவில் மாலை 6 மணிவரையிலும்,

ஜார்கண்ட்டில் நக்சல் பாதிப்பு பகுதிகளில் 31 வாக்குச்சாவடிகளில் மாலை 4 மணி வரையிலும்,

ஏனையவற்றில் மாலை 5 மணிவரையிலும் வாக்குப்பதிவு நடைபெறும்.

இவற்றுடன் மகராஷ்டிர மாநிலம் **Nanded** மக்களவை தொகுதி மற்றும் பஞ்சாப் உத்திரபிரதேசம், கேரளா, உத்திரகாண்ட் மாநிலங்களின் 15 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவும் இன்று நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை வரும் 23ஆம் தேதி நடைபெறும்.

**********

ராஜ்நாத்சிங்

ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் லாவோஸ் புறப்பட்டார்.

பிராந்திய சர்வதேச கூட்டமைப்பு கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார்.

திரு.ராஜ்நாத்சிங் ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், லாவோஸ், மலேசியா நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ் தென்கொரியா, அமெரிக்க நாட்டு பாதுகாப்பு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

பாதுகாப்பு பிரிவில் இருதரப்பு நட்புறவையும், ஒத்துழைப்பையும் மேம்படுத்துவது குறித்து இதில் முக்கியமாக ஆலோசிக்கப்படுகிறது.

**********

நீதிமன்றம்

கள்ளக்குறிச்சி கருணாபுரத்தில் விஷ சாராய உயிரிழப்பு சம்பவம் தொடர்பான வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அஇஅதிமுக, பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் தாக்கல் செய்த பொதுநல மனுக்களை விசாரித்த நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

கள்ளக்குறிச்சியில் கடந்த ஜூன்மாதம் விஷ சாராயம் அருந்தி 66 பேர் உயிரிழந்த வழக்கை **CBCID** விசாரித்து வந்த நிலையில் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

இதனிடையே சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி, இத்தீர்ப்பை எதிர்த்து, மேல்முறையீடு செய்வது குறித்து முதலமைச்சரிடம் கலந்தாலோசிக்கப்படும் என்றார்.

**********

செந்தில் பாலாஜி

கோவையில் உலக தரம் வாய்ந்த ஹாக்கி மைதான பணிகள் தொடங்கியுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கோவையில் இம்மைதானம் அமைய உள்ள இடத்தை இன்று பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இப்பணிகள் நிறைவடையும் என்றார்.

ஆர்.எஸ்.புரம் பகுதியில் 9 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பில் மைதானம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**********

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் மழை அளவை பொறுத்து முதல்நாள் இரவே கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் மகிழ் முற்றம் திட்டத்திற்கான லட்சினையை இன்று வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் உளவியல் ரீதியாக அனைவரும் சமம் எனும் எண்ணத்தை பள்ளி மாணாக்கரிடையே உருவாக்கும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

**********

பழனிவேல் தியாகராஜன்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலை சுற்றியுள்ள 4 சித்தரை வீதிகளில் பாதாள சாக்கடை, குடிநீர் தூய்மை பணிகள் குறித்து மாநில தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு.**P.T.R** பழனிவேல் தியாகராஜன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், சித்திரை வீதிக்கென தனிகவனம் செலுத்தி அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து அதனை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக கூறினார்.

மீனாட்சியம்மன் திருக்கோவில் யானை தொடர் கண்காணிப்பில் உள்ளதாக குறிப்பிட்டார்.

இப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த தகுந்த நடவடிக்கை எனவும் அமைச்சர் கூறினார்

**********

ராஜேந்திரன்

சேலம் மாவட்ட அளவில் அரசு பள்ளிகளுக்கிடையிலான கலைத்திருவிழாவை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

இப்போட்டியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் கலந்துகொள்கின்றனர்.

**********

சேகர்பாபு

வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு தெரிவித்திருக்கிறார்.

இப்பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதுசார்ந்த 200 பணிகள் வரும் 30ஆம் தேதி தொடங்கப்படும் என்றார்.

**********

செல்வபெருந்தகை

நெல்லைமாவட்டம் நான்குநேரி பகுதியில் தொழில்நுட்ப பூங்கா பணிகளை சட்டப்பேரவை பொதுக்கணக்கு குழு இன்று ஆய்வுசெய்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இதன் தலைவர் திரு. செல்வபெருந்தகை, இப்பணிகள் நிறைவுபெற்றால் தென்பகுதி மக்கள் பெருமளவில் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என கூறினார்.

**********

சி.விஜில்

கடல் மார்க்கமாக தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்கும் சி.விஜில் இரண்டு நாள் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி கன்னியாகுமரி கடலில் இன்று தொடங்கியது.

இம்மாவட்டத்தில் உள்ள 48 கடற்கரை கிராமங்களில் அதி நவீன படகுகள் மூலம் ஒத்திகை கண்காணிப்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கடலோர காவல்படை, தொழில் பாதுகாப்பு படை, சுங்கத்துறை, மீன்வளம், தீயணைப்பு உள்ளிட்ட துறைகள் இதில் பங்கேற்றுள்ளன.

**********

ஜன் விகாஸ் காரியகிராம்

சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூரில் பழமையான தேவாலயம் பிரதமரின் ஜன் விகாஸ் காரியகிராம் திட்டத்தின் கீழ் ஒருகோடியே 55 லட்ச ரூபாய் நிதியில் புதுப்பிக்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

இதனிடையே காரைக்குடி கருவியப்பட்டி முத்து மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான 100 பவுன் தங்க நகைகள் ரொக்கப்பணம் வெள்ளி பொருட்கள் களவு போனதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

**********

இருவரி

மாநிலங்களுக்கான நிதி பகிர்வு குறித்து ஆலோசனை மேற்கொள்ள தமிழகம் வந்துள்ள திரு. அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16ஆவது நிதி ஆணைய குழுவினர் ராமேஸ்வரம் தங்கச்சிமடம் பஞ்சாயத்தில் மத்திய அரசின் திட்ட செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு செய்தனர்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீட்டினை ஆய்வு செய்த இக்குழுவினர் பயனாளிகளுடனும் கலந்துரையாடினர்.

திருச்சி மண்ணச்சநல்லூர் இருங்களூர் ஊராட்சியில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று ஆய்வு செய்தார்.

அங்குள்ள மாற்றுத்திறனாளி மறுவாழ்வு இல்லத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்ட அவர் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியையும் தொடங்கிவைத்து உறுதிமொழியையும் செய்துவைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான கடனுதவி திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் மாவட்ட தொழில் மையத்தை அணுகலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் சிறப்பு முகாமில் 186 பேருக்கு அடையாள அட்டைகளை ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் தங்கள் கோரிக்கைகளை அடுத்த மாதம் 5ஆம் தேதி நேரிலோ அஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட அனைத்து கிராமங்களிலும் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் இன்று நடைபெறுவதால் பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு பெறலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் புளியரசி கிராமத்தில் சிறுத்தை நடமாட்டம் உறுதி செய்யப்பட்டுள்ளதால் கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரோப்கார் சேவை இன்றுமுதல் தொடங்கியதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

**********

<u>மழை மாவட்டங்கள்</u>

நெல்லையில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் சாலைகள், தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மணிமுத்தாறு அருவியில் 7 ஆவது நாளாக சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாகையில் தொடர் கன மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த 30 ஆயிரம் ஏக்கர் குறுவை நெற்பயிர்கள் நீரில் சாய்ந்துள்ளதால் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடியில் தொடர் மழை காரணமாக குடியிருப்புகளை மழை நீர் சூழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருவாரூர் மாவட்டத்தில் இன்றுஅதிகாலை முதல் கன மழை பெய்துவருவதால் கடைவீதிகளில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளன.

சாலையோர வியாபாரிகள் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**********

<u>வானிலை</u>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருவாரூர் நாகை திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று கன மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை தஞ்சை புதுக்கோட்டை சிவகங்கை ராமநாதபுரம் தூத்துக்குடி விருதுநகர் தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கன மழைக்கான வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளில் நாளை மறுநாள் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்றும்,

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

மன்னார்வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

<u>ஹாக்கி</u>

பீஹார் ராஜ்கிரில் ஆசிய மகளிர் சாம்பியன் பட்ட ஹாக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் மலேசியா – ஜப்பானுடன் மோதுகிறது.

**********

<u>பேட்மிண்டன்</u>

**Shenzhen-**இல் நடைபெறும் சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷயா சென்னும்,

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பி.வி.சிந்து, மாள்விகா பன்சோத் ஆகியோரும் முன்னேறியுள்ளனர்.

**********

டேபிள் டென்னிஸ்

ஜெர்மனி டெசல் டோ.்.பில் மகளிர் டேபிள் டென்னிஸ் முதல் சுற்றில் இந்தியாவின் பிரியதர்ஷினி -நெதர்லாந்தின் ஷ்வோகனையும்,

நைனா ஜெய்ஸ்வால் - ஜப்பானின் ஹியோக்காவையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் மன்தர் ஹர்தீக்கர் இன்று களமிறங்குகிறார்.

**********